# இல்புகும் வாயில் - பாணன்

முனைவர் சு. முத்துலட்சுமி

தமிழ்த்துறை, விரிவுரையாளர்
கேரளா பல்கலைக்கழகம்
கேரளா

## முன்னுரை

சங்க அகத்திணைப் பாடல்களில் இடம் பெறும் வாயில்களுள் பாணன் முக்கிய இடத்தினைப் பெறுகிறான். இவ்வாயில்கள் கூற்று நிகழ்த்தும் இடங்களும் வரையறுக்கப் பட்டுள்ளன. தலைவன், தலைவி, நற்றாய் ,செவிலி, தோழி ஆகியோர் இல்லத்தில் வாழ்பவர்கள். தலைவியின் தந்தையும் சகோதரனும் இல்லத்தில் வாழ்ந்தாலும அவர்கள் உரை நிகழ்த்துவதில்லை .இல்லத்திற்கு வெளியே இருக்கும் பாணன் ,பாங்கன், பார்ப்பான் போன்றோர் இல்லத்திற்கு வந்து செல்லும் உரிமை பெற்றவர்கள். இந்த வாயில்கள் மூலமாகவே தலைவி வெளியுலக தொடர்பு கொள்கிறாள். இவர்களுள் பார்ப்பானும், பாணனும் தலைவன் ,தலைவியின் இல்வாழ்க்கையில் தலையிட்டு அவர்ளை நல்வழிப்படுத்தும் உரிமையும் கடமையும் கொண்டவர்களாகத் திகழ்கிறார்கள். சங்க இலக்கியத்தில் பாணனே பெரும்பான்மை பாடல்களில் இல்புகும் வாயிலாக இடம்பெற்றுள்ளான்.

### வாயில்கள்

சங்க இலக்கியப் பாடல்களைப் பாடுபொருள் அடிப்படையில் அகம்,புறம் என தொல்காப்பியம் பாகுப்படுத்தியுள்ளது. அகத்திணைப் பாடல்களில் தலைவன்,தலைவி,தோழி,நற்றாய் ,செவிலி போன்றோர்களின் கூற்று நிகழ்த்தும் இடங்கள் கூட வரையறுக்கப் பட்டுள்ளன. தொல்காப்பியர் இல்வாழ்வில் தலைவன் ,தலைவிக்கு உதவும் வாயில்களைக் கற்பியலில் வரையறுத்துள்ளார்.

தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாடினி இளையர் விருந்தினர்
கூத்தார் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த விறப்பின் வாயில்கள் என்ப

(தொல் கற் 52)

மேலும் கூத்தார்,பாணர் போன்றோர் தலைவன், தலைவி இல்வாழ்க்கை இன்பமாக நடக்க காரணமான வாயில்களாக தொல்காப்பியர் வகுத்துள்ளார்.
இதனை

தொல்லவை உரைத்தலும் நுகர்ச்சி ஏத்தலும்
பல்லாற் றாலும் ஊடலில் தகைத்தலும்

(தொல் கற் 27)

என்ற நூற்பா ,தலைவன் தலைவி வாழ்வின் இன்பத்தினைப் புகழ்தலையும் ,ஊடலைத் தணிப்பதையும் சுட்டுகின்றது. இந்நூற்பா கூத்தர் என்னும் வாயிலுக்குரியவையாகச் சுட்டினாலும் தொடர்ந்து வரும் நூற்பா பாணர்க்குரியதாக உள்ளது.

நிலம் பெயர்ந்துரைத்தல் அவள் நிலை உரைத்தல்
கூத்தற்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய

(தொல் கற் 166)

இந்நூற்பாவில் தலைவன் இருக்கும் இடம் சென்று வந்து அவன் நிலையைத் தலைவிக்கு உரைத்தலும் தலைவனிடம் தலைவியின் நிலையை உரைப்பதும் கூத்தார் ,பாணர் இருவர்க்கும் உரியன என்று கூறப்பட்டுள்ளது. இவ்விரு நூற்பாவிலும் தலைவன் தலைவியின் இல்வாழ்க்கையைத் தொடரச் செய்யும் பொறுப்பும் கடமையும் பாணனுக்குரியது என்பதைத் தொல்காப்பியம் விளக்குகிறது.

பாணன் இல்புகும் வாயில் எனும் நிலையில் தனது கடமையைச் செய்யும் போது உயர்ந்த நிலையில் இருப்பதையும் கடமையைச் சரிவர செய்யாத நிலையில் அடையும் வீழ்ச்சியையும் .சங்கப் பாடல்கள் விளக்குகின்றன.

**இல்புகும் வாயில் எனும் நிலையில் பாணனின் உயர்வு**

இல்புகும் வாயில் எனும் நிலையில் பாணன் தலைவன் பொருட்டு தலைவியிடமோ, தலைவி பொருட்டு தலைவனிடமோ தூது செல்கிறான். தங்கள் வாழ்வின் சிக்கலுக்குப் பாணன் தீர்வு காணவேண்டும் என்னும் எதிர்பார்ப்பு தலைவன் தலைவியிடம் உள்ளது.

கதழ்பரி நெடுந்தேர் அதர்படக் கடைஇ
சென்றவர் தருகுவல் என்னும்;
நன்றால் அம்மா பாணனது அறிவே

( ஐங் 474)

தலைவிக் கூற்றாக அமையும் இப்பாடலில் தலைவன் நெடுந்தொலைவு சென்று திரும்பி வராத காரணத்தால் தோன்றிய தலைவியின் ஆற்றாமை துயர் கண்டு பாணனே தலைவன்பால் தூதுசெல்லும் விருப்பத்தினை வெளியிடுகிறான். சேய்மை கருதாது தானே சென்று தலைவனை அழைத்து வருவதாகப் பாணன் கூறியதைக் கேட்ட தோழி அவனுடைய பொறுப்புணர்ச்சியையும் ,தலைவியின்பால் கொண்ட பரிவையும் கண்டு வியந்து பாணனின் அறிவு நன்று என பாராட்டுகிறாள். இப்பாடல் பாணன் மீதான உயர் மதிப்பை அவனுடைய பொறுப்புணர்ச்சி பெற்றுத் தருவதை விளக்குகிறது.

தணியா நோய் உழந்து ஆனாத் தகையவள் - தகைபெற
அணிகிளர் நெடுந்திண்தேற் அயர்மதி - பணிபுநின்
காமர் கழல் அடிசேரா
நாமம் சால் தெல்வரின் நடுங்கினள் பெரிதே

(கலி.30)

தலைவன் பரத்தை ஒழுக்கத்தினால் தலைவியின் ஐயங்கள் அவளுடைய மீளாத காம நோயின் காரணமாக எழுந்தவை என்பதைத் தலைவனுக்கு உணர்த்துகிறான் பாணன். .இல்வாழ்வில் தோன்றும் ஐயங்களைக் களைந்து தலைவியின் நினைவு தலைவன் மனதில் எழும்படிச் செய்கிறான். உன்னைப் பணியாத பகைவர் நீ அவருக்குக் கொடுக்கப் போகும் தண்டனையை நினைத்து நடுங்குவது போல் அவள் உள்ளம் நடுங்க நிக்கிறாள் எனத் தலைவி நிலையை எடுத்துக் கூறுகிறான். பகைவருக்கே அருள் செய்யும் தலைவன் தலைவிக்கும் அருள் வேண்டும் என பாணன் வற்புறுத்துகிறான். தலைவி தன் அழகை மீண்டும் பெறும்படி

தலைவன் தன் அழகிய தேரைச் செலுத்த வேண்டும் என்கிறான். யாழ் மீட்டும் பாணன் இல்புகும் வாயில் என்னும் கடமையின் காரணமாகவே இதை செய்கிறான். இல்புகும் வாயிலாக அவன் உயர்விற்குக் கடமை உணர்வும் ,அதை செய்து முடிப்பதற்கு அவசியமான வாக்கு வன்மையுமீ காரணங்களாக அமைகின்றன.

அகத்திணையில் மட்டுமின்றி ,புறத்திணைப் பாடல்களில் கூட இல்புகும் வாயிலாகப் பாணர்களின் பதிவினைக் காணமுடிகின்றது. புறநானூற்றுப் பாடல்களில் வரும் பேகன் தன மனைவியான கண்ணகியைப் பிரிந்து வாழ்ந்த போது ,பரணர்,கபிலர் ,அரிசில்கிழார் , பெருங்குன்றூர் கிழார் ஆகிய பெரும்புலவர்கள் அவர்கள் இல்வாழ்வில் தலையிட்டு இணைந்து வாழ வேண்டுகின்றனர். ஆனால் தங்களைப் பாணர்களாகப் பாவித்துக் கொண்டே கண்ணகிக்கு அருள் செய்ய வேண்டுகின்றனர்.

சீறியாழ் செவ்வழி பண்ணி ,நின் வன் புல
நம்நாடு பாட என்னை நயந்து
பரிசில் நல்குவை ஆயின் , குரிசில் நீ
நல்காமையின் நைவரச் சாஅய்
அருந் துயர் உழக்கும் நின் திருந்து இழை அரிவை

(புறம் 146)

செவ்வழிப் பண்ணை இசைத்து பேகனின் நாட்டினைப் பாடும் பாணனான அரிசில்கிழார் தனக்கு பரிசில் ஏதாவது வழங்குவதாக இருந்தால் அது பேகன் அருள் செய்யாததால் காண்போர் இரங்கும் படி உடல் மெலிந்து துயரத்தால் வருந்தும் அவன் மனைவியியைக் காணச் செல்வதே தான் விரும்பும் பரிசு என்கிறார். மற்றொரு பாடலில் பெருங்குன்றூர் கிழாரும் தன்னைப் பாணனாகப் பாவித்துக் கொண்டு பாடியுள்ளார்.

மண்ணுறுமணியின் மாசு அர மண்ணி
புது மலர் கஞல இன்று பெயரின்
அதுமன் எம் பரிசில் - ஆவியர் கோவே

(புறம் 147)

இப்பாடலிலும் பெருங்குன்றூர் கிழார் தான் விரும்பும் பரிசாக பேகன் தன் மனைவியை அன்றே காண செல்ல வேண்டும் என்கிறார்.

அரசன் நெறிமாறி சென்றவிடத்து ,அவனை இடித்துரைத்து ,நெறிப்படுத்துவதை இப்பாடல்கள் உணர்த்துகின்றன. பரணர்,கபிலர் ,அரிசில்கிழார் , பெருங்குன்றூர் கிழார் போன்றோர்கள் பெரும் புலவர்களாக இருந்தபோதும் ,அவர்களுக்கு இல்வாழ்வில் தலையிடும் உரிமை இல்லாதிருந்தது. அதனாலே தங்களைப் பாணர்களாக முன்னிலைப் படுத்திக்கொண்டு இப்பாடல்களைப் பாடியுள்ளனர். இல்புகும் வாயில் எனும் நிலையில் பாணர்கள் பரிசில் பெறுவதை நோக்கமாகக் கொள்ளவில்லை. இல்வாழ்வை நெறிப்படுத்தும் பாணர்கள் உயர்ந்த நிலையில் இருப்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

**இல்புகும் வாயிலான பாணனின் வீழ்ச்சி**

இல்புகும் வாயிலான பாணனின் வீழ்ச்சியையும் சங்கப் பாடல்கள் சிலவற்றில் இருந்து உணர்ந்து கொள்ள முடிகின்றது. இல்புகும் வாயிலாகத் தன் கடமையிலிருந்து தவறுவதே இவ்வீழ்சசிக்குக் காரணமாகிறது.

ஐங்குறுநூறு 138 வது பாடலும் கடமை தவறிய பாணனைத் தலைவி இடித்துரைப்பதைச் சுட்டுள்ளது.

பண்பு இல்லை,மன்ற பாண - இவ் ஊர்
அன்பு இல கடிய கழறி
மேன்புலக் கொண்களைத் தாராதோயே

(ஐங் 138)

நெய்தல் நிலத்தைச் சார்ந்த தலைவன் பரத்தையிடம் சென்றான். அத்தலைவனைக் கடுமையானச் சொற்களால் இடித்துரைத்து, தலைவியின்பால் சேர்த்து வைக்க பாணன் தவறிவிட்டான். பொருளுக்காகப் பாணன் இல்புகும் வாயிலாகத் தன் கடமையிலிருந்து தவறிய நிலையைப் "பண்பற்றவன்" என்ற சொல்லால் இப்பாடலில் இழிவுபடுத்தப்படுகிறான்.

கருங் கோட்டுப் புன்னைக் குடக்கு வாங்கு பெருஞ் சினை
விருந்தின் வெண் குறுக்கு ஆற்ப்பின் ,ஆஅய்
வான் மகிழ் நாலவைப் பரிசில் பெற்ற
பான் அமை நெடுந்தீர்ப் பாணியின் ஒலிக்கும்
தன்னம் தூதொடும் வந்த
பயன் தேறி பனுவற் பை தீர் பாண
நின் வாய்ப் பனி மொழிகளையா-பல் மாண்
பிதுவஈ ஞுழலோடு புன்னை தாம்அம்
மணம் கமழ் கானல், மாண் நலம் இழந்த
இறை ஏர் எல்வளைக் குறுமகள்
பிறை ஏர் திரு நூதாழ் பாஅயா பசப்பே

( நற் 167)

இப்பாடல் பாணன் பணிவான மொழியில் தலைவியிடம் பேசுவதை உணர்த்துகிறது. தூதாக வந்த பாணன் தலைவன் கொடுக்க போகும் பரிசிலுக்காக பொய் மொழிகளைப் பணிவாகத் தலைவியிடம் கூறுகிறான். வளையல்கள் கழன்று போகும்படி வருத்தத்தால் உடல் மெலிந்த நிலையில் தலைவி காணப்படுகிறாள். பாணனோ தலைவியின் பிரிவுத் துயரை உணரவில்லை . இல்புகும் வாயிலாக பாணன் தலைவியின் துயரைத் தலைவனுக்கு உணர்த்தி அவர்களின் இல்வாழ்க்கையைத் தொடரச் செய்திருக்க வேண்டும். ஆனால் தலைவன் தரப் போகின்ற பரிசிலுக்காகப் பாணன் கடமையைச் செய்ய தவறிவிட்டான்.இப்பாடலும் பாணனின் வீழ்ச்சியைக் குறிக்கிறது.

எல்லா பாணர்களையும் இவ்வாறு தலைவன் தரும் பொருளுக்காக இல்புகும் வாயில் எனும் கடமையிலிருந்து தவறியவர்களாகச் சொல்ல முடியாது. ஆனால் குறுந்தொகைப் பாடல் வரிகள் ஒருசில பாணர்களின் செயலால் பாணர் குலமே இழிவெய்து விட்டது என்கின்றன.

ஒரு நின் பாணன் பொய்யனாக
உள்ள பாண ரெல்லாம்
கள்வர் போல்வர்நீ யகன்றிசி னோர்க்கே

(குறு 127)

தலைவனின் பாணன் மட்டுமே பொய்யன். ஆனால் தலைவர்களைப் பிரிந்த எல்லா தலைவிகளுக்கும் பாணர்கள் எல்லாருமே கள்வரைப் போலவர்களாகவே தோற்றமளிக்கின்றனர். ஒரு சிலரின் செயலால் இல்புகும் வாயில் என்னும் உயர் மரியாதையைப் பாணர்கள் இழந்து கொண்டிருக்கின்றனர் என்பதை ஓரம்போகியார் என்னும் புலவர் தன பாடல் வரிகளில் பதிவு செய்துள்ளார்.

**முடிவுரை**

தொல்காப்பியம் வகுத்துள்ள 12 வாயில்களில் ஒருவனான பாணன் இல்வாழ்வில் அறங்களை உணர்த்தும் கடமையுள்ளவனாக சங்கப்பாடல்கள் தெரிவிக்கின்றன. தலைவன் ,தலைவிக்கிடையே நிகழும் ஊடல்களைக் பாணனே களைகிறான். இல்புகும் வாயில் எனும் நிலையில் பாணன் அடையும் வெற்றி அவனுடைய பொறுப்புணர்ச்சி ,சொல் வன்மை இவற்றை சார்ந்ததாக அமைகின்றது. இல்புகும் வாயிலாக தன் கடமையிலிருந்து தவறும் போது பாணன் அடைந்த வீழ்ச்சியையும் சங்கப்பாடல்கள் உணர்த்துகின்றன.

**துணைநூற்பட்டியல்**


1. இராசமாணிக்கனார். கலித்தொகை ,வள்ளுவர்பண்ணை ,சென்னை
2. மாதையன் பெ.தொல்காப்பியம் பெரியார் பல்கலைக் கழகம் சேலம்
3. ராஜம் எஸ் .குறுந்தொகை ,மர்ரே கம்பெனி சென்னை
4. ராஜம் எஸ் .ஐங்குறுநூறு ,மர்ரே கம்பெனி சென்னை
5. ராஜம் எஸ் .புறநானூறு ,மர்ரே கம்பெனி சென்னை